


19. 11. 2025

தலைப்புச்செய்திகள்

1. தென்னிந்திய வேளாண்மை ஒட்டுமொத்த நாட்டிற்கும் வழிகாட்டுவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கோவையில் தெரிவித்துள்ளார்.

வேளாண் நிதி உதவி திட்டத்தின் கீழ் 18 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை 9 கோடி விவசாயிகளின் வங்கி கணக்கில் பிரதமர் இன்று விடுவித்தார்.

2. உலகளாவிய பருவநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்வதில் நம் நாடு முன்னோடியாக திகழ்கிறது என்று குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

3. நம் நாட்டின் அடையாளத்தையும், எதிர்காலத்தையும் முன்னெடுத்து செல்வதில் வெளிநாடுவாழ் இந்தியர்கள் முக்கிய பங்காற்றுவதாக மத்திய அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி குறிப்பிட்டுள்ளார்.

4. தமிழ்நாட்டில் கூட்டுறவு வங்கிகள் ஏழை எளிய மக்களுக்கு உடனடி கடன்களை வழங்கி வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு தெரிவித்துள்ளார்.

5. ஆஸ்திரேலியன் ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு லக்ஷயா சென், H.S பிரணாய், தருண் மன்னேபள்ளி, கிடாம்பி ஸ்ரீகாந்த், ஆயுஷ் ஷெட்டி ஆகியோர் முன்னேறினர்.

இனி விரிவான செய்திகள்

***********

பிரதமர்

கோவையின் ஜவுளித்துறை தேச வளர்ச்சிக்கு இன்றியமையா பங்காற்றுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

கோவையில் பிரதமரின் வேளாண் நிதியுதவி திட்டத்தின் கீழ் 21ஆவது தவணை தொகையான 18 ஆயிரம் கோடி ரூபாயை 9 கோடி விவசாயிகளின் வங்கி கணக்குகளில் விடுவித்து உரையாற்றிய பிரதமர், தொழில் ஆற்றலின் சக்தியாகவும், கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த நகரமாகவும் கோவை திகழ்கிறது என்று புகழாரம் சூட்டினார்.

இயற்கை விவசாயம் தமது இதயத்திற்கு நெருக்கமானது என்று கூறியஅவர், புதிய தொழில்நுட்பத்தின் மூலம், வேளாண் தொழிலை முன்னெடுத்து செல்லும் விவசாயிகளை பாராட்டினார்.

இளைஞர்களும், விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்களுடன் செயலாற்றி வருவது குறித்து பெருமிதம் தெரிவித்த பிரதமர், கோவையில் இயற்கை

வேளாண்மை பற்றி கூடுதலாக தாம் அறிந்துகொண்டதாக கூறினார்.

கடந்த 11 ஆண்டுகளில் வேளாண் தொழில் பெரும் வளர்ச்சி கண்டு ஏற்றுமதி இரட்டிப்பாகியுள்ளதாக அவர் எடுத்துரைத்தார்.

விவசாயிகளின் கடன் அட்டை மூலம் 10 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இயற்கை வேளாண்மை தற்போதை தேவை என்று குறிப்பிட்ட பிரதமர், ரசாயன உரங்கள் பயன்பாட்டால், மண்வளம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், செலவினமும் அதிகரிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இயற்கை வேளாண்மை உயிரி பன்முக தன்மையை அதிகரித்து பருவ மாற்ற சவால்களை எதிர்கொள்ள வழிகோலுவதாக எடுத்துரைத்தார்.

தென்னிந்திய வேளாண்மை ஒட்டுமொத்த நாட்டிற்கும் வழிகாட்டுவதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

நீர் மேலாண்மையில் இந்தியாவிற்கு தமிழகம் வழிகாட்டுகிறது என்றும் குறிப்பிட்டார்.

முன்னதாக கோவை விமான நிலையம் வந்த பிரதமரை தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி, மாநில அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

கோவை கொடிசியா வளாகத்திற்கு சென்ற பிரதமரை சாலையின் இருமருங்கிலும் கூடியிருந்த மக்கள் மலர் தூவியும், நடனமாடியும், உற்சாகமாக வரவேற்றனர்.

கோவை கொடிசியா அரங்கில் இயற்கை வேளாண்மை கண்காட்சியை துவக்கிவைத்த பிரதமர் விவசாயிகளுடன் கலந்துரையாடினார்.

கண்காட்சியில் இடம்பெற்றிருந்த வேளாண் பொருட்கள் குறித்து விவசாயிகள் பிரதமரிடம் எடுத்துரைத்தனர்.

இயற்கை வேளாண் பொருட்களால் உருவாக்கப்பட்ட நினைவு பரிசுகள் பிரதமருக்கு வழங்கப்பட்டது.

முன்னதாக ஆந்திர மாநிலம் புட்டபர்த்தி ஸ்ரீசத்தியசாய்பாபா நூற்றாண்டு கொண்டாட்டங்களில் பங்கேற்ற பிரதமர் நினைவு நாணயத்தையும், தபால் தலையையும் வெளியிட்டார்.

சாய்பாபாவின் கொள்கைகளான அன்பு, சேவை, சகோதரத்துவம், உலகம் முழுவதிலும் உள்ள அவர்களது பக்தர்களை வழிநடத்துவதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

செல்வ மகள் சேமிப்பு திட்டத்தின் கீழ் சாய்பாபா அறக்கட்டளை நிறுவனம் 20 ஆயிரம் கணக்குகளை தொடங்கியதை எடுத்துரைத்த பிரதமர், இந்த திட்டத்தின் கீழ் 4 கோடி கணக்குகள் தொடங்கப்பட்டு மூன்றரை லட்சம் கோடி ரூபாய் சேமிக்கப்பட்டு பெண் குழந்தைகளின் நிதி பாதுகாப்பை உறுதி செய்வதாக குறிப்பிட்டார்.

உள்ளூர் பொருட்களை வாங்கி உள்ளூர் பொருளாதாரத்தை மேம்படுத்த மக்கள் உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

2014ஆம் ஆண்டு 25 கோடியாக இருந்த மத்திய அரசின் சமூக பாதுகாப்பு திட்ட பயனாளிகள் தற்போது 100 கோடியாக அதிகரித்திருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

***********

குடியரசு தலைவர்

டிஜிட்டல் தொழில்நுட்பம் நாட்டு மக்களுக்கு ஏராளமான வாய்ப்புகளை வழங்கி வருவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் தேசிய தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் 5ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், தொலைதூர பகுதிகளுக்கும் இணையதள சேவையும், நவீன தொழில்நுட்பங்களும் கொண்டு செல்லப்படுவதால் சம வாய்ப்புகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

நவீன மின்னணு மாதிரி கிராமங்களை உருவாக்க தேசிய தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்றும் புதிய தொழில்நுட்பங்களை கண்டறிய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான இலக்குகளுடன் நம் தேசம் தன்னம்பிக்கையுடனும் எழுச்சியுடனும் முன்னேறி செல்வதாக அவர் கூறினார்.

உலகளாவிய காலநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்வதில் நம் நாடு முன்னோடியாக திகழ்கிறது என்றார்.

***********

நிர்மலா சீதாராமன்

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் பட்ஜெட்டிற்கு முந்தய 7ஆவது ஆலோசனைக்கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

வங்கி நிதி சேவை மற்றும் காப்பீடு பிரிவுகளின் வல்லுநர்களுடன் துறை சார்ந்த அம்சங்கள் குறித்து அமைச்சர் விவாதித்தார்.

மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு.பங்கஜ்சவுத்ரி,

நாட்டின் முதன்மை பொருளாதார ஆலோசகர்,

பொருளாதார துறையின் மூத்த அதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டு சந்தை பிரதிநிதிகளுடன் நிதியமைச்சர் நேற்று கலந்துரையாடினார்.

மத்திய பட்ஜெட்டில் பல்வேறு துறையின் முக்கிய அம்சங்கள் மற்றும் பொருளாதார முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் நிதியமைச்சகம், பல்துறைகளின் உயர்நிலை பிரதிநிதிகளுடன் ஆண்டுதோறும் ஆலேசானைகளை மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது.

***********

சந்திரசேகர் பெம்மசானி

வெளிநாடுகளில் வாழும் இந்திய சமூகத்தினர் தங்களது கலாச்சார வேர்களுடன் இணைந்திருப்பதன் அவசியத்தை மத்திய தொலைதொடர்பு ஊரக

மேம்பாட்டுத்துறை இணை அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசானி தெரிவித்துள்ளார்.

அஸர்பைஜான் தலைநகர் பாஹூவில் உரையாற்றிய அவர், நம்நாட்டின் உலகளாவிய அடையாளத்தையும், எதிர்காலத்தையும் வலுப்படுத்துவதில் வெளிநாடுவாழ் இந்திய சமூகத்தினர் முக்கிய பங்காற்றுவதாக குறிப்பிட்டார்.

வெளிநாடுவாழ் இந்தியர்களின் இரட்டை அடையாளத்தை சுட்டிக்காட்டிய அவர், அங்குள்ள சமூக மக்களின் ஒற்றுமையை பாராட்டினார்.

அஸர்பைஜான் நாட்டில் செயல்படும் பல்வேறு சங்கங்களும், அமைப்புகளும் நம் நாட்டின் கலாச்சாரத்தை உயிர்ப்புடன் வைத்திருப்பதாக கூறினார்.

புதிய டிஜிட்டல் கண்டுபிடிப்புகள், புதுப்பிக்கதக்க எரிசக்தி, விண்வெளி ஆராய்ச்சி, பொருளாதார வளர்ச்சியில் நம்நாடு வேகமாக மேம்பட்டு வருவதாக கூறிய அவர், இதில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் முக்கிய பங்காற்றுவதாக கூறினார்.

வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களின் நலனில் இந்தியா உறுதிபூண்டிருப்பதாக கூறிய டாக்டர் பெம்மசானி, அவர்களை வரவேற்க இந்தியா எப்பொழுதும் தயாராக உள்ளதாக கூறினார்.

***********

திரைப்பட விழா

56 ஆவது சர்வதேச திரைப்பட விழா கோவா தலைநகர் பனாஜியில் நாளை வண்ணமயமான கலாச்சார அணிவகுப்பு நிகழ்வுகளுடன் தொடங்குகிறது.

வரும் 28ஆம் தேதிவரை நடைபெற உள்ள இவ்விழாவில் 80-க்கும் மேற்பட்ட நாடுகளின் திரைப்பட தயாரிப்பாளர்கள், திரைத்துறை பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

நம் நாடு மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த 270-க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் இதில் திரையிடப்பட உள்ளன.

திரைப்பட துறையினரின் அறிவுத்திறனையும், படைப்பாற்றல் திறனையும் வெளிக்கொணர இந்த திரைப்பட விழா ஒரு வாய்ப்பாக அமைவதோடு நட்புறவை மேம்படுத்தி, உலகளாவிய ஒத்துழைப்பிற்கு வழிகோலுகிறது.

***********

இந்திராகாந்தி

முன்னாள் பிரதமர் இந்திராகாந்தியின் 108ஆவது பிறந்த நாளை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி அன்னருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற மத்திய மண்டபத்தில் உள்ள அவரது திருவுருவ படத்திற்கு மக்களவை தலைவர் திரு.ஓம்.பிர்லா,

நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு,

மாநிலங்களவை எதிர்கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜூன கார்கே,

மக்களவை எதிர்கட்சி தலைவர் திரு.ராகுல்காந்தி உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

***********

கே.என்.நேரு

தமிழ்நாட்டில் கூட்டுறவு வங்கிகள் ஏழை எளிய மக்களுக்கு உடனடி கடன்களை வழங்கி வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சி கலையரங்கில் 72ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் இன்று உரையாற்றிய அவர், கூட்டுறவு சங்கங்கள் மக்களின் பணத்திற்கு, முழு பாதுகாப்பு வழங்குவதாக எடுத்துரைத்தார்.

மாநிலத்தில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கூட்டுறவு சங்கங்கள் செயல்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ்நாட்டில் முறையாக கடனை திருப்பி செலுத்தும் விவசாயிகளின் வட்டியை அரசே ஏற்கும் நிலை உள்ளதாக குறிப்பிட்டார்.

கூட்டுறவு சங்கங்களுக்கான உறுப்பினர் சேர்ப்பு பணிகள் தொடர்ந்து நடைபெறுவதாக கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் திருச்சி ஸ்ரீரங்கம் புதிய பேருந்து நிலையம் விரைவில் திறக்கப்படும் என்றார்.

காவிரி பாலப்பணிகள் முடிவடைந்த பின்னர் உயர்மட்ட பாலப்பணிகள் தொடங்கப்படும் என்றார்.

வாய்ஸ்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அளவில் சிறப்பாக செயலாற்றிய கூட்டுறவு சங்கங்களுக்கும்

பணியாளர்களுக்கும் கேடயங்களை வழங்கிய அமைச்சர் 23 கோடி ரூபாய் மதிப்பிலான கடனுதவிகள் மற்றும் நல திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

***********

உதய நிதி ஸ்டாலின்

தமிழகத்தில் விளையாட்டு துறைக்கு பல்வேறு திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதாக துணை முதலமைச்சர் திரு.உதய நிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் மாம்பாக்கத்தில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், கடந்த ஆண்டு 12 ஆயிரத்து 500 கிராமங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

***********

சிவசங்கர், வேலு

கள்ளக்குறிச்சி மாவட்டம் செங்கனாங்கொள்ளை மற்றும் பெருவங்கூரில் புதிதாக அமைய உள்ள துணைமின் நிலையத்திற்கு அமைச்சர்கள் திரு.எ.வ.வேலு, திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் இன்று அடிக்கல் நாட்டினர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் திரு.சிவசங்கர் கடந்த நான்கரை ஆண்டுகளில இம்மாவ்டத்தில் 64 ஆயிரத்து 747 புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

சீரான மின்விநியோகத்தில் நாட்டிலேயே தமிழகம் முன்னோடியாக திகழ்கிறது என்றார்.

அமைச்சர் திரு.எ.வ.வேலு பேசுகையில் இந்த துணை மின் நிலையங்கள் செயல்பாட்டிற்கு வரும்போது 50 ஆயிரம் இணைப்புகள் மூலம் 50க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயன்பெறுவார்கள் என்றார்.

***********

மனோதங்கராஜ்

திருவண்ணாமலை மாவட்டம் கொளத்தூர் கிராமத்தில் கறவை பசுக்களுக்கு குடற்புழு நீக்க மருந்துகளும், கால்நடைகளுக்கு தாது உப்புகள் வழங்கும் திட்டத்தை மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு.மனோதங்கராஜ் இன்று துவக்கிவைத்தார்.

தொடர்ந்து விவசாயிகள், பால் உற்பத்தியாளர்களிடம் அமைச்சர் கலந்துரையாடினார்.

***********

மா. சுப்பிரமணியன்

சேலம் ஏற்காடு சொனப்பாடி கிராமத்தில் வசிக்கும் மலைவாழ் மக்களை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் இன்று நேரில் சந்தித்து பேசியதோடு, மக்களை தேடி மருத்துவ திட்ட பயனாளிகளுடன் கலந்துரையாடினார்.

இந்த திட்டத்தின் கீழ் இரண்டரை கோடி பேர் பயனடைந்திருப்பதாக அவர் கூறினார்.

மக்களை தேடி மருத்துவ திட்டத்திற்கு சிறப்பு விருது ஐ.நா.சபையில் 79 ஆவது கூட்டத்தில் வழங்கப்பட்டதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

***********

ஒற்றுமை ஓட்டம்

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150ஆவது பிறந்த ஆண்டு நிறைவை ஒட்டி ஈரோட்டில் மத்திய இளைஞர்நலன் மற்றும் விளையாட்டுத்துறை சார்பில் நடைபெற்ற தேசிய ஒற்றுமை பேரணியில் 300க்கும் மேற்பட்ட கல்லூரி மாணாக்கர் இன்று பங்கேற்றனர்.

தேச ஒற்றுமையையும், தேச பக்தியையும் பறைசாற்றும் வகையில் இப்பேரணி அமைந்ததாக எனது பாரதம் மாவட்ட அலுவலர் கீர்த்தனா தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு பொருட்கள் பயன்பாடு, தேச ஒற்றுமைக்கான பண்புகள் தொடர்பான உறுதிமொழியை மாணாக்கர் ஏற்றுக்கொண்டனர்.

***********

உப்பளம்

நாகை வேதாரண்யம் பகுதிகளில் பெய்துவரும் தொடர் கன மழை காரணமாக 9 ஆயிரம் ஏக்கரில் உப்பு உற்பத்தி பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

இருவரி

அரியலூர் மாவட்டத்தில் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பயன்படுத்தாத உணவகங்கள் உணவு பாதுகாப்புத்துறையின் விருதுபெற விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் வரும் 21ஆம் தேதி நடைபெற இருப்பதால் 10ஆம் வகுப்பு முதல் பட்டதாரிகள் வரை பங்கேற்று பயனடையலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் கூறியுள்ளார்.

***********

சுவாச அடைப்பு நோய்

உலக நெடுநாள் சுவாச அடைப்பு நோய் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதன் மூலம் இந்நோயிலிருந்து முழுமையாக விடுபடலாம் என திருச்சியை சேர்ந்த ஆஸ்துமா அலர்ஜி மற்றும் முதியோர் நல மருத்துவர் கமல் தெரிவிக்கிறார்.

***********

வீடூர் அணை

விழுப்புரம் மாவட்டம் வீடூர் அணை நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக இன்று தண்ணீர் திறக்கப்பட்டது..

135 நாட்களுக்கு திறக்கப்பட்ட இந்த தண்ணீரின் மூலம் 3 ஆயிரத்து 200 ஏக்கர் ஆயக்கட்டு பகுதிகள் பாசனவசதி பெறும்.

***********

வானிலை

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கன்னியாகுமரி திருநெல்வேலி தென்காசி நாகை மயிலாடுதுறை மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வரும் 22ஆம் தேதி தென் கிழக்கு வங்ககடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

தற்போது வங்க கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி லட்சதீவை ஒட்டிய, மாலத்தீவு பகுதிகளில் நிலைகொண்டுள்ளது.

இது அடுத்த 24 மணிநேரத்தில் மேற்கு வடமேற்கு திசையில் நகரக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***********

பேட்மிண்டன்

சிட்னியில் நடைபெறும் ஆஸ்திரேலியன் ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு இந்தியாவின் லக்ஷயா சென், H.S பிரணாய், தருண் மன்னேபள்ளி, கிடாம்பி ஸ்ரீகாந்த், ஆயுஷ் ஷெட்டி ஆகியோர் இன்று முன்னேறியுள்ளனர்.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது